අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/05/04/06/03-11

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018.03. 13

சுற்று நிருப இல : 12/2018

சகல மாகாணக்கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல மாகாணப் பாட இணைப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
இரண்டாம் தேசியமொழி (சிங்களம்/தமிழ்) பாடப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள்,
இரண்டாம் தேசியமொழி (சிங்களம்/தமிழ்) ஆசிரிய ஆலோசகர்கள்.

<u>பாடசாலை, வலய, மாகாண, அகில இலங்கை மட்டத்தில் இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்) வருடாந்தப் போட்டிகளை நடாத்துவதற்கான சுற்று நிருப திருத்தம்.</u>

கல்விச் செயலாளரின் 2006/37(I)ம் இலக்கம் மற்றும் 2013.01.02ம் திகதிய இரண்டாம் தேசியமொழி (சிங்களம்/ தமிழ்) சுற்றுநிருபத்தில் 2018.01.01ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தங்கள் செய்கிறேன். அதற்கமையப் பாடசாலைமட்ட இரண்டாம் தேசியமொழி (சிங்களம்/தமிழ்) போட்டிகள் இச் சுற்று நிருப விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய நடாத்தப்பட வேண்டும்.

2018ம் வருடம் தொடக்கம் இச் சுற்றுநிருப விதிகளின் படி மாகாண, வலய மற்றும் பாடசாலை மட்டங்களுக்கு முறையாக அறிவித்து ஒவ்வொரு வருடமும் இப் போட்டிகளை உரிய மட்டங்களில் நடாத்துவதற்கும், அதன்படி அகில இலங்கை மட்ட வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.

அகில இலங்கை மட்ட போட்டிகளுக்காக மாணவர்களை பங்கு பற்றச் செய்யும் போது சுற்று நிருபத்தில் உள்ள மாதிரி விண்ணப்பத்தின் பிரகாரம் சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணையை கல்வி அமைச்சுக்கு அனுப்ப வேண்டும். இது தொடர்பில் உங்கள் விசேட கவனத்தை செலுத்துவது கட்டாயமானது என்பதை தயவுடன் குறித்துக் கொள்ளவும்.

சுனில் ஹெட்டியாரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

## அகில இலங்கை இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்) போட்டித் தொடர்

**1.0 அறிமுகம் :**

கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கல்விப் பிரிவின் மூலம் அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 6 முதல் தரம் 9 வரையான மாணவர்களுக்காக போட்டிகள் வருடா வருடம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கமைய மொழித் திறன்களுடன் பொது அறிவினை விருத்தியுறச் செய்தலும் ஆக்கபூர்வமான திறன்கள் மற்றும் இரண்டாம் தேசிய மொழித் தேர்ச்சியினை மேம்படச் செய்தலும் இப்போட்டிகளின் நோக்கமாகும்.

சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் சிங்களம் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் இரண்டாம் தேசிய மொழி தமிழிலும், தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் இரண்டாம் மொழி சிங்களத்திலும் இப்போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியும்.

1.1 இப்போட்டிகள் 4 மட்டங்களில் நடைபெறும்

01. பாடசாலை மட்டம்
02. வலய மட்டம்
03. மாகாண மட்டம்
04. அகில இலங்கை மட்டம்

1.2 இதுவரை நடாத்தப்பட்ட இரண்டாம் தேசிய மொழிப் போட்டி நிகழ்ச்சிகளில் சிங்கள மொழி மூல (சிங்களத்தை தாய் மொழியாகக் கொண்ட ) மாணவர்களின் பங்குபற்றுகை ஒப்பீட்டளவில் குறைவான மட்டத்தில் இருப்பதால் இதற்கான ஆர்வத்தை விருத்தி செய்வதற்கும், தமிழ் மொழி மூல (தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட) மாணவர்களுக்காக இச்சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுக்க வேண்டியிருப்பதாலும் இப்போட்டி நிகழ்ச்சியை மாகாண மட்டம் வரை இரு பிரிவுகளாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1.3 நாட்டார் பாடல் போட்டி நிகழ்ச்சியை தவிர்ந்த ஏனைய போட்டி நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் கீழ் வரும் நிபந்தனைகள் பொருந்தும்.

01. சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் சிங்களத்தை தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களுக்காகவும்(சிங்கள மாணவர்கள்)
02. சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களுக்காகவும்( முஸ்லிம் மற்றும் தமிழ்)

இரண்டாம் தேசிய மொழி போட்டி நிகழ்ச்சிகளில் போட்டியிட முடியும்.இப்போட்டி நிகழ்ச்சியில் மேலே குறிப்பிட்ட இரு பகுதிகளுக்குமுரிய மாணவர்களுக்கும் போட்டிகள் வெவ்வேறாக நடத்தப்பட்டு முதலிடத்தைப் பெறும் இரு மாணவர்கள் மாத்திரம் வலய, மாகாண மற்றும் அகில இலங்கை மட்டப் போட்டிகளில் கலந்துக்கொள்ளச் செய்ய முடியும். எனினும் அகில இலங்கை மட்டப் போட்டிகள் மேலே குறிப்பிடப்பட்ட 1, 2 ஆகிய இரு சாரருக்கும் பொதுப் போட்டியாக நடத்தப்பட்டு பெறுபேறுகளும் பொதுவாகவே தீர்மானிக்கப்படும்.

## 9.0 பொது குறிக்கோள்கள்

01. இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும், அடிப்படை தொடர்பாடல் திறன்களை மேம்படச் செய்தல்.
02. தேசிய ஒற்றுமையை வளர்த்தலும் இனங்களுக்கிடையே மத, மொழி, கலாசார ரீதியான சக வாழ்வினை விருத்தி பெறச் செய்தலும்
03. இரண்டாம் தேசிய மொழி கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை முறைமைப்படுத்தலும் விருத்தியுறச் செய்தலும்
04. இரண்டாம் தேசிய மொழி தொடர்பான பலதரப்பட்ட மொழித் தேர்ச்சிகளை மதிப்பீட்டுக்குட்படுத்தலும் அவற்றை விருத்தியுறச் செய்தலும்
05. இரண்டாம் தேசிய மொழி கற்றல்- கற்பித்தலில் தூண்டலை ஏற்படுத்தல்
06. இரண்டாம் தேசிய மொழி தொடர்பான கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டினை நேரடி அனுபவங்களைப் பெறும் சந்தர்ப்பங்களாக மாற்றுதல்
07. நிகழ்கால உலக பிரச்சினைகளை மனிதநேயத்தோடு பார்க்கும் திறனைக் கொண்ட மனப்பாங்குடைய பிரசைகளை உருவாக்குதல்.

## 10.0 பொது அறிவுறுத்தல்கள்

கால வரையறையும், போட்டிகளை நடத்துவதற்கான வகை கூறலும்

| போட்டி மட்டம் | தெரிப்படுத்தலும் பங்குபற்றலும் | போட்டிகளை நடாத்தி முடிக்க வேண்டிய இறுதித் திகதி | பெறு பேறுகள் ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் திகதி மற்றும் விபரம் |
|---|---|---|---|
| பாடசாலை | 1. அதிபர்<br>3. இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழு<br>3. பாடசாலையில் 6-9 தரங்களில் பயிலும் மாணவர்கள் | மே 15 | ஒவ்வொரு போட்டிகளிலும் தெரிவுசெய்யப்படும்இருவரை மாத்திரம் குறிப்பிட்டு உரிய மாதிரியின் படி தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணையை மே 31 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும் |
| வலயம் | 1. வலயக் கல்வி பணிப்பாளர்/<br>இரண்டாம் தேசிய மொழி பாட இணைப்பாளர் /<br>இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழு<br>2. பாடசாலை மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள் | ஜீலை 30 | ஒவ்வொரு போட்டியிலும் தெரிவுசெய்யப்பட்ட இருவரின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டு உரிய மாதிரியின் படி தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணையை ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும் |
| மாகாணம் | 1. மகாணக் கல்விப் பணிப்பாளர்<br>மாகாணப் பாட இணைப்பதிகாரி/<br>மாகாண இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழு<br>2. வலய மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள் | செப்டெம்பர் 15 | ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் 1 ஆம் 2ஆம் இடங்களைப் பெற்றவர்களின் பெயர்கள் குறிப்பிட்டு உரிய மாதிரியின் படி தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணையை செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் "பிரதிக் கல்விப் பணிப்பாளர், தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு , கல்வி அமைச்சு, இசுருபாய பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் |
| அகில இலங்கை | 1. கல்விப் பணிப்பாளர்/<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்- இரண்டாம் தேசிய மொழி<br>4. மாகண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள் | நவம்பர் 15 | திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் சான்றிதழ்கள் வழங்கலும் இறுதி விழாவும் வைபவரீதியாக நடாத்தப்படும். |

பாடசாலை மட்டம் : (மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்)

போட்டி இலக்குகளை அடையும் வகையில் சிறப்பான முறையில் பாடசாலை மட்ட போட்டிகளில் தரங்கள் 6-9 வரையுள்ள சகல மாணவர்களும் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்குவது கட்டாயமாகும். இதில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்க ஒரு நாளை ஒதுக்குவது பாடசாலை அதிபரதும் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழுவினதும் பொறுப்பாகும். இப்போட்டிகளின் குறிக்கோள்களை அடையும் வகையில் பாடசாலை மட்டம் போட்டிகளில் தரம் 6-9 வரையான அனைத்து மாணவர்களும் பங்குபற்றுதல் கட்டாயமானதாகும்.

3.2 வலய மட்டம் : (ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்)

பாடசாலை மட்ட பெறுபேற்றின்படி 1 ஆம் 2 ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் மாத்திரம் வலய மட்ட போட்டி நிகழ்ச்சிகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். சுற்றுநிருபம் 1:3 விதிமுறைக்கு அமைய செயற்படல் வேண்டும். மேலும், வலய மட்ட இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்தி குழு நியமிக்கப்படல் வேண்டும். இக்குழுவின் தலைவராக வலய கல்விப் பணிப்பாளரும், செயலாளராக இரண்டாம் தேசிய மொழி பாட இணைப்பாளரும், குழு அங்கத்தவர்களாக மொழிகள் மற்றும் அழகியற் துறை பாடங்களுக்கு பொறுப்பானவர்களை கொண்ட 3 அதிகாரிகள் உள்ளடக்கப்படல் வேண்டும். கல்வி அமைச்சினால் மாகாண போட்டிகளுக்காக முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட வினாத்தாள்களை மாதிரியாகக் கொண்டு வினாப்பத்திரம் தயாரிக்கப்படுவதும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு நிகழ்ச்சியை மேற்பார்வை செய்வதும் வலய இரண்டாம் மொழி இணைப்பதிகாரியின் பொறுப்பாகும்.

3.3 மாகாண மட்டம் : (செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்)

வலய மட்ட போட்டி நிகழ்ச்சியில் 1ஆம் , 2 ஆம் இடங்கள் பெற்ற மாணவர்கள் மாத்திரம் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்ற முடியும். சுற்றுநிருபம் விதிமுறைகளுக்கு அமைய சகல மாகாணங்களினதும் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்தி குழு நியமிக்கப்படல் வேண்டும். இக்குழுவின் தலைவராக மாகாண கல்விப் பணிப்பாளரும், குழு அங்கத்தவர்களாக ஏனைய வலயங்களில் உள்ள இரண்டாம் தேசிய மொழி பாட இணைப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளடக்கப்பட வேண்டும். போட்டி நிகழ்ச்சிகள் நடை பெறுவதற்கான திட்டமிடல், பாடசாலை மட்டம் முதல் வலய மட்டம் வரையிலான போட்டி நிகழ்ச்சி நடத்துவதற்கான ஆலோசனை வழங்கல், மற்றும் வழி காட்டல் என்பன மாகாணத்தின் இரண்டாம் தேசிய மொழி பாட இணைப்பதிகாரியின் பொறுப்பாகும். அத்துடன் சகல மட்டங்களினதும் போட்டி தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்ய வேண்டும். மாகாண மட்ட எழுத்து போட்டிகளுக்காக கல்வி அமைச்சினால் வழங்கப்படும் வினாப்பத்திரத்தை குறிப்பிட்ட நேர அட்டவணைப்படி சகல மாகாணங்களிலும் குறித்த நாளில் குறித்த நேரத்தில் நடாத்த வேண்டும்.

3.4 அகில இலங்கை மட்டம் : (நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்)

மாகாண மட்ட பெறுபேறுகளின் படி சுற்றுநிருப விதிமுறை 1:3 பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளருக்காக மாத்திரம் அகில இலங்கை மட்ட போட்டிகள் கல்வி அமைச்சினால் நடாத்தப்படும். நாட்டார் பாடல் போட்டிகள் பொது போட்டியாக நடாத்தப்படும். செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் சகல மாகாணங்களும் பெறுபேற்று அறிக்கைகளை கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவிற்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

### பாடசாலை மட்டம் : (மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்)

போட்டி இலக்குகளை அடையும் வகையில் சிறப்பான முறையில் பாடசாலை மட்ட போட்டிகளில் தரங்கள் 6-9 வரையுள்ள சகல மாணவர்களும் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்குவது கட்டாயமாகும். இதில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்க ஒரு நாளை ஒதுக்குவது பாடசாலை அதிபரதும் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழுவினதும் பொறுப்பாகும். இப்போட்டிகளின் குறிக்கோள்களை அடையும் வகையில் பாடசாலை மட்டம் போட்டிகளில் தரம் 6-9 வரையான அனைத்து மாணவர்களும் பங்குபற்றுதல் கட்டாயமானதாகும்.

### 3.2 வலய மட்டம் : (ஜீலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்)

பாடசாலை மட்ட பெறுபேற்றின்படி 1 ஆம் 2 ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் மாத்திரம் வலய மட்ட போட்டி நிகழ்ச்சிகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். சுற்றுநிருபம் 1:3 விதிமுறைக்கு அமைய செயற்படல் வேண்டும். மேலும், வலய மட்ட இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்தி குழு நியமிக்கப்படல் வேண்டும். இக்குழுவின் தலைவராக வலய கல்விப் பணிப்பாளரும், செயலாளராக இரண்டாம் தேசிய மொழி பாட இணைப்பாளரும், குழு அங்கத்தவர்களாக மொழிகள் மற்றும் அழகியற் துறை பாடங்களுக்கு பொறுப்பானவர்களை கொண்ட 3 அதிகாரிகள் உள்ளடக்கப்படல் வேண்டும். கல்வி அமைச்சினால் மாகாண போட்டிகளுக்காக முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட வினாத்தாள்களை மாதிரியாகக் கொண்டு வினாப்பத்திரம் தயாரிக்கப்படுவதும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு நிகழ்ச்சியை மேற்பார்வை செய்வதும் வலய இரண்டாம் மொழி இணைப்பதிகாரியின் பொறுப்பாகும்.

### 3.3 மாகாண மட்டம் : (செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்)

வலய மட்ட போட்டி நிகழ்ச்சியில் 1ஆம் , 2 ஆம் இடங்கள் பெற்ற மாணவர்கள் மாத்திரம் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்ற முடியும். சுற்றுநிருபம் விதிமுறைகளுக்கு அமைய சகல மாகாணங்களினதும் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்தி குழு நியமிக்கப்படல் வேண்டும். இக்குழுவின் தலைவராக மாகாண கல்விப் பணிப்பாளரும், குழு அங்கத்தவர்களாக ஏனைய வலயங்களில் உள்ள இரண்டாம் தேசிய மொழி பாட இணைப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளடக்கப்பட வேண்டும். போட்டி நிகழ்ச்சிகள் நடை பெறுவதற்கான திட்டமிடல், பாடசாலை மட்டம் முதல் வலய மட்டம் வரையிலான போட்டி நிகழ்ச்சி நடத்துவதற்கான ஆலோசனை வழங்கல், மற்றும் வழி காட்டல் என்பன மாகாணத்தின் இரண்டாம் தேசிய மொழி பாட இணைப்பதிகாரியின் பொறுப்பாகும். அத்துடன் சகல மட்டங்களினதும் போட்டி தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்ய வேண்டும். மாகாண மட்ட எழுத்து போட்டிகளுக்காக கல்வி அமைச்சினால் வழங்கப்படும் வினாப்பத்திரத்தை குறிப்பிட்ட நேர அட்டவணைப்படி சகல மாகாணங்களிலும் குறித்த நாளில் குறித்த நேரத்தில் நடாத்த வேண்டும்.

### 3.4 அகில இலங்கை மட்டம் : (நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்)

மாகாண மட்ட பெறுபேறுகளின் படி சுற்றுநிருப விதிமுறை 1:3 பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளருக்காக மாத்திரம் அகில இலங்கை மட்ட போட்டிகள் கல்வி அமைச்சினால் நடாத்தப்படும். நாட்டார் பாடல் போட்டிகள் பொது போட்டியாக நடாத்தப்படும். செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் சகல மாகாணங்களும் பெறுபேற்று அறிக்கைகளை கல்வி அமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவிற்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

3.5 போட்டி வகைகள்

இப்போட்டிகளின் போட்டி நிகழ்ச்சிகள், போட்டிகளுக்கான தரங்கள், மற்றும் போட்டிகளுக்கான எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | கணிப்பீட்டு வகை | தரம் 6 | 7 | 8 | 9 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மொழிப் பிரயோகமும் கிரகித்தலும் | 01 | 01 | 01 | 01 | 04 |
| 2 | வாசிப்பு | 01 | 01 | 01 | 01 | 04 |
| 3 | பேச்சு | 01 | 01 | 01 | 01 | 04 |
| | மொத்த கணிப்பீட்டு எண்ணிக்கை | 03 | 03 | 03 | 03 | 12 |
| 4 | நாட்டார் பாடல்(குழு போட்டி) | 01 | | | | 1 |
| | மொத்தம் ஒரு மொழிக்கு | 03 + 03 + 03 + 03 + 01 | | | | 13 |

இரண்டாம் தேசிய மொழி( தமிழ்) , இரண்டாம் தேசிய மொழி( சிங்களம்) என்ற வகையில் மொத்தம் 26 போட்டிகள் நடாத்தப்படும் என்பதை கவனத்தில் கொள்க.

குறித்த ஒரு வருடத்தில் ஒரு போட்டியாளருக்கு ஒரு போட்டி நிகழ்ச்சியில் மட்டுமே பங்கு பற்ற முடியும். எனினும் அடுத்த வருடத்தில் அதே போட்டி நிகழ்ச்சியில் பங்கு பற்றாது வேறொரு போட்டியில் பங்கு பற்ற முடியும். எச்சந்தர்ப்பத்திலாவது போட்டி விதிகளை மீறினால் போட்டியிலிருந்து நீக்கப்படுவர்).

சகல போட்டிகளும் ஆரம்பிக்க முன் இங்கு குறிப்பிடப்படும் குறிக்கோள்கள், நிபந்தனைகள், புள்ளித்திட்டம் தொடர்பாக மாணவர்களை தெளிவாக அறிவுறுத்த வேண்டும். போட்டியில் பங்குபற்றும் போது தனது பெயர், பாடசாலை, முகவரி, தரம், கற்கும் மொழி மூலம், போட்டியிடும் மொழி மூலம், (உதாரணம் : சிங்கள மொழிமூலம் - இரண்டாம் மொழி தமிழ்) வலயம், மாகாணம் என்பனவற்றை கட்டாயம் தெளிவாகவும், பிழையின்றியும் குறிப்பிடல் வேண்டும். (தமது தாய் மொழியில் இதனை எழுதலாம்) தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தபால் அடையாள அட்டையை போட்டியின் போது சமர்பிக்க வேண்டியது கட்டாயமாகும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.( புகைப்படத்துடன் கூடிய ஆள் அடையாள ஆவணமொன்றை சமர்பித்தல் வேண்டும்).

## 4.0 நிபந்தனைகள் மற்றும் புள்ளித்திட்டம்

### 4.1 மொழிப்பிரயோகமும் கிரகித்தலும்- எழுத்துப் போட்டி

#### 4.1.1 குறிக்கோள்கள்

எழுத்து, சொல் வாக்கியங்கள் மற்றும், படங்கள் என்பவற்றைச் சரியாக இனங்காணும் திறனையும் இரண்டாம் மொழி தொடர்பான கிரகித்தலையும் விருத்தி செய்தல்

03. கற்று நிருபத்தில் தரப்பட்டுள்ள( பின்னிணைப்பு – 2ஐப் பார்க்கவும்) 1 2 3 வகை நாட்டார் பாடல் பகுதிகளுள் இரு பகுதிகளைத் தெரிந்து ஒரு பகுதியிலிருந்து ஒரு பாடல் என்ற வகையில் 02 பாடல்களையும் தாம் சுயமாக தெரிவு செய்த ஒரு நாட்டார் பாடலையும் சேர்த்து மொத்தம் மூன்று பாடல்களை முன்வைத்தல் வேண்டும். (வருடாந்தம் இப்பாடல்கள் மாற்றத்துக்குள்ளாக்கப்படும்.)

01. தாலாட்டுப்பாடல்
02. விளையாட்டுச் சார்ந்த பாடல்
03. தொழில்சார் பாடல்கள் ;

04. பாடல்களை மனனஞ் செய்து பாடவேண்டும்
05. அந்தந்தப் பாடலுக்குரிய இராகங்களை அறிந்து பாடவேண்டும்.
06. முகபாவனை தவிர்ந்த ஏனைய அங்க அசைவுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது
07. பாடசாலை சீருடையில் பாடலை முன்வைக்க வேண்டும்

### 4.4.3 புள்ளி வழங்கும் திட்டம்

| | |
|---|---|
| 1. மரபுரீதியான லயம்(இராக விதிகள்) சுருதிகள் என்பவற்றைப் பின்பற்றல் | 15 |
| 2. உச்சரிப்புத் தெளிவு | 15 |
| 3. ஒத்திசைவு | 10 |
| 4. பாவம் முகபாவனை நினைவாற்றல் | 10 |
| மொத்தம் | 50 |

## 5.0 பொது ஒழுங்கு விதிகள்

5.1 அனைத்துப் பாடசாலைகளிலும் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக்கான குழு நியமிக்கப்படல் வேண்டும். அதிபர் குழுவின் தலைவராகவும், செயலாளராகப் பாடப் பொறுப்பாசிரியரும், குழு அங்கத்தவர்களாக சிங்களம், தமிழ், மற்றும் அழகியற் பாட ஆசிரியர்கள் மூவர் இருத்தல் வேண்டும்.

5.2 பாடசாலை மட்டப் போட்டிகளுக்காக பாடசாலையிலுள்ள தரம் 6 தொடக்கம் 9 வரையிலான சகல மாணவர்களும் பங்குபற்ற வேண்டும். இது தொடர்பாக பாடசாலை அதிபரும் ,பாடப் பொறுப்பாசிரியர்களும் இரண்டாம் தேசிய மொழி அபிவிருத்திக் குழுவும் வகைக்கூறல் வேண்டும்.

5.3 போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொள்வோர்( ஒரு போட்டிக்கு)

5.3.1 பாடசாலை மட்டம் : 6-9 தரங்களில் உள்ள சகல மாணவர்களும்
5.3.2 வலய மட்டம் : பாடசாலை மட்டத்தில் வெற்றி பெற்ற இரு மாணவர்கள்
5.3.3 மாகாண மட்டம் : வலய மட்டத்தில் வெற்றி பெற்ற இரு மாணவர்கள்

# பெறுபேற்று மாதிரி விண்ணப்பப் படிவம்

<u>அகில இலங்கை இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்) போட்டித் தொடர்</u>

கல்வி கற்கும் மொழி மூலம் :..........................................................................................

போட்டியில் பங்குபற்றும் தேசிய இரண்டாம் மொழி சிங்களம் /தமிழ் :..................................................

வலயம் / மாகாணம் :..........................................................................................

போட்டி வகை( உதாரணம் -பேச்சு) :..........................................................................................

தரம் : ( உதாரணம் -தரம் -6) :..........................................................................................

| தொடர் இல | போட்டியாளர்களின் பெயர் ( முதலெழுத்துக்களுடன் தெளிவாக) | நிலை | பெற்ற புள்ளிகள் | பாடசாலை பெயரும் முகவரியும் சரியாக | மாகாணம் | வலயம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |

அதிபர் வ.க.ப. மா.க.ப உறுதியுரை

மேற்படி தகவல்கள் எமது பாடசாலையில்/ வலயத்தில் / மாகாணத்தில் நடாத்தப்பட்ட இரண்டாம் தேசிய மொழி (சிங்களம் / தமிழ்) போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களை பெற்ற இரு வெற்றியாளர்களின் சரியான தகவல்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.................................

பாடப் பொறுப்பாசிரியர்

பாடத்திற்கு பொறுப்பான உ.க.ப /பி.க.ப

.................................................

அதிபர் வலய.க.ப / மா.க.ப.

பெயர் :

பதவி முத்திரை :

திகதி :

(இந்த பெறுபேற்று அட்டவணை படி தயாரிக்கப்பட்ட பெறுபேற்றினை சரியாகவும், தெளிவாகவும் நிரப்பி அந்தந்த போட்டிகளுக்காக இரண்டு பிரதிகள் அனுப்பல் வேண்டும்)